Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

## வாராந்த பாடசாலை

பாடம் :- குடியியல்

2ம் வாரம்

தரம் :- 07

தயாரித்தவர்:- E. நிரோஷனி (இ/ப/ இராசகலை தமிழ் வித்தியாலயம்)

**பாட இலக்கம் : 02**

**தலைப்பு : எமது சமூகம்**

**01. சரியான விடையைத் தெரிவு செய்க.**

1) அரச தகவல் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கம்

1. 1199   2. 1818   3. 1999   4. 1919

2) சுய கௌரவமாக கருதப்படும் பண்புகளில் ஒன்று

1. நேர்மை   2. முன்கோபம்
3. தன்னம்பிக்கை இன்மை   4. பொறுமையின்மை

3) யாதாயினும் ஒரு விடயப்பரப்பு தொடர்பான தகவல்களை முன்வைக்கின்ற மூலாதாரம்

1. தகவல்   2. நூல்   3. தரவு   4. மூலாதாரம்

4) பாடசாலை வரலாற்றினை அறிய உதவும் மூலாதாரம்

1. பாடசாலை சம்பவத்திரட்டு   2. கலைக்களஞ்சியம்
3. மகாவம்சம்   4. வரவு இடாப்பு

5) பின்வருவனவற்றுள் அச்சு ஊடகமொன்று

1. வானொலி   2. இணையம்
3. பத்திரிகை   4. தொலைக்காட்சி

**02. சரி,பிழை இடுக.**

1) எங்களது முன் அனுபவம் பயன்மிக்க தரவுகளும் தகவலும் ஆகும். (   )

2) தற்கால உலகம் தரவு மற்றும் தகவல்களால் நிரம்பியுள்ளது. (   )

3) எழுத்துருவில் இருப்பவற்றை மட்டுமே தரவுகளாகவும் தகவல்களாகவும் கொள்ள முடியும். (   )

4) இணையத்தளத்தில் தீய விடயங்கள் மாத்திரமே கிடைக்கும். (   )

5) விசேடமாக இன்றைய ஊடகங்கள் பலவும் வியாபார நோக்கினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றன. (   )

**03. கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) தரவு என்றால் என்ன?

2) ஊடகங்களின் மூலம் தினமும் மாணவர் பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

3) கீழ்த்தரப்பட்ட தொலைப்பேசி இலக்கத்தின் மூலம் குறிப்பிடப்படும் பிரிவினை தரப்பட்ட இலக்கத்தின் முன் எழுதுக.

1. 1919 - ……………………………………………………………………………………..

2. 119 - …………………………………………………………………………………….

4) தரவுகள் மற்றும் தகவல்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய பிரதான ஊடகங்கள் இரண்டினை பெயரிடுக.

5) நிகழ்காலத்தில் பாவனையிலுள்ள பிரசித்திப் பெற்ற நவீன ஊடகங்கள் மூன்றினை எழுதுக.

6) ஊடகங்களின் ஊடாக மாணவர் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்கள் ஐந்தினை குறிப்பிடுக.

7) நிகழ்கால ஊடகங்கள் மக்கள் நன்மைக்கு காரணமாகும் சந்தர்ப்பங்கள் ஐந்தினை குறிப்பிடுக.

**03. வானொலி, தொலைக்காட்சி, இணையம், பத்திரிகை போன்றவற்றின் மூலம் அறிந்து கொள்ளக்கூடிய தரவு வகைகள் சிலவற்றை குறிப்பிட்டு அவற்றின் பயன்களை விளக்குக.**

| தரவுகள் | | பயன்கள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |